## திருவாடானை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: முனைவர்.திருமதி.அ.மாதவி,எம்.ஏ.,எம்.பில்.பி.எச்.டி., முதல்வர்.

ந.க.எண்.201/ஆ/2019 நாள்: 13.03.2020

பொருள்: கல்லூரிக் கல்வித்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை - நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் (தொகுதி-IV) 2015-16, 2016-2017 மற்றும் 2017-2018-ஆம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் பணியிடம் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது – பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித எண்: 1018/ PSD-G2/2019, நாள்: 13.02.2019.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 7881/பி1/2019, நாள்: 28.02.2019.
3. இக்கல்லூரி முதல்வரின் செயல்முறைகள் ந.க. எண். 201/ஆ/2019, நாள். 01.03.2019.
4. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்: 7881/பி1/2019, நாள்: 03.12.2019.

---------------

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ஆம் ஆண்டுக்கான தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கான தெரிவுப் பட்டியலில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக பணி நியமனம் பெற்ற திருமதி.நா.ரோகிணி என்பார் பார்வை 3-ல் காணும் இக்கல்லூரி முதல்வரின் கடிதத்தின்படி 06.03.2019 முற்பகல் முதல் இக்கல்லூரியில் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணையிடுமாறு, பார்வை 4-ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் அன்னாரது பணி நியமன நாளான 06.03.2019 முற்பகல் முதல் தனியரின் இளநிலை உதவியாளர் பணியினை கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

**நிபந்தனை:**

இப்பணிவரன்முறை தொகுதி IV - 2015-16, 2016-2017 மற்றும் 2017-2018 பணிநியமனம் தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்பாணைக்குட்பட்டது.

13.3.20 13.3.20

(முதல்வர்)

முதல்வர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை.

பெறுநர் :

திருமதி.நா.ரோகிணி, இளநிலை உதவியாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

13.3.2020

நகல்:

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பலாகிறது.

பட்டியல்

ஆ1 பிரிவிற்கு
ஆ பிரிவிற்கு